தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.50/மா/2022**

**நாள். 01.06.2022**

திரு. ஆ.கதிரவன்,
திருத்தங்கல், சிவகாசி – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல், பெத்தனன் சந்து, கதவு எண்.4–ல் வசிக்கும் திரு. ஆ.கதிரவன் என்பவரின் 11.04.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.05.2022 அன்று பெறப்பட்டு 50/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல், பெத்தனன் சந்து, கதவு எண்.4–ல் வசிக்கும் திரு. ஆ.கதிரவன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 11.04.2022 நாளிட்ட தனது மனுவில், "விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சிவகாசி மாநகராட்சியின் ஆளுகைக்குட்பட்ட திருத்தங்கல் நகராட்சி பகுதியில் கடந்த ஆட்சியில் 10 ஆண்டுகள் நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பொதுமக்களிடம் மானூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்பு வழங்குவதாக கூறி நகராட்சி நிர்ணயம் செய்த தொகையைவிட கூடுதல் தொகையாக ரூ.25,000/– வரை பெற்றுக்கொண்டு பணத்தில் நகராட்சி அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட தொகையை கொடுத்து நகராட்சி வைப்புத்தொகை (டெபாசிட்) கட்டாமல் அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் கொடுத்துள்ளார்கள். இதனால் நகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், மக்களிடம் அதிக தொகை வசூல் செய்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டி பலமுறை நகராட்சி நிர்வாகத்திடம் எங்கள் கட்சியின் சார்பாக நேரில் சென்றும், புகார் மனுக்கள்

கொடுத்தபோது நகராட்சி நிர்வாகம் விசாரணை செய்து வரன்முறைப்படுத்தப்படும் என்று உறுதி அளித்தார்கள். ஆனாலும் இதுவரை வரன்முறைப்படுத்தப்படவில்லை என்று தெரியவரப்படுகிறது. கடந்த 01.01.2022அன்று தினகரன் செய்தித்தாளில் வந்த செய்தியில் சிவகாசி மாநகராட்சி அதிகாரி கூறும்போது திருத்தங்கல் பகுதியில் அனுமதியின்றி கொடுக்கப்பட்டுள்ள சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிநீர் இணைப்புகள் போடப்பட்டுள்ளது என தெரியவரப்படுகிறது. அதை நாங்கள் துண்டிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். தேவையென்றால் குடிநீர் இணைப்புகள் தொடர விரும்புபவர்கள் நகராட்சிக்கு வைப்புத்தொகை (டெபாசிட்) கட்ட வலியுறுத்தியுள்ளோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். மேற்படி சிவகாசி மாநகராட்சி திருத்தங்கலில் அனுமதியின்றி 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிநீர் இணைப்புகளின் வைப்புத்தொகை (டெபாசிட்) மற்றும் ஆண்டுதோறும் நகராட்சிக்கு வரவேண்டிய குடிநீர் வரியின் தொகையை நகராட்சிக்கு செலுத்தாமல் முறையான அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் வழங்கிய சம்மந்தப்பட்ட அனைத்து நகராட்சி அலுவலர்களிடம் தொகையை வசூல் செய்து நகராட்சி வருவாய் இழப்பை சரிசெய்து அவர்கள் மீது துறைசார்ந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்களிடம் குடிநீர் இணைப்பிற்கு பணத்தை பெற்ற நபர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறி கடந்த 18.01.2022ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை, முதலமைச்சர் தனிப்பிரிவு, மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மற்றும் ஆணையாளர், சிவகாசி ஆகியோர்களுக்கு மனு அனுப்பினேன். இதுவரை எனக்கு எந்தவித பதில் தகவலோ, அதுகுறித்து நடவடிக்கையோ இல்லாத காரணத்தினால் நினைவூட்டும் மனுவாக கடந்த 11.03.2022ம் தேதி மேற்படி துறைகளுக்கு மீண்டும் அனுப்பினேன். அதற்கும் எந்தவித பதிலும் நடவடிக்கையும் இல்லாதது எனக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்துகிறது. நீதியின் கடைசி இருப்பிடமாக கருதி இந்த மனு சமர்ப்பிக்கப்படுகிறது. ஆகவே முறையாக விசாரணை செய்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு ஆணையர், சிவகாசி மாநகராட்சி அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 17.05.2022 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 25.05.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 17.05.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

4) மனுதாரர் 25.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்:

" சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட திருத்தங்கல் நகராட்சிப்பகுதியில் கடந்த பல வருடங்களாக மானூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்பு வழங்குவதாகக் கூறி நகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக ரூ.25 ஆயிரம் பெற்றுக்கொண்டு நகராட்சிக்கு வைப்புத்தொகையை கட்டாமலும், ரசீது ஏதும் கொடுக்காமலும் அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர், ஆணையாளர் ஆகியோருக்கு புகார் மனு அனுப்பப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே முறையான அனுமதியின்றி குடிநீர்

இணைப்புகள் வழங்கிய சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் தேவையான நடவடிக்கை எடுத்திடுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என்றும் மேலும் 11.04.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) சிவகாசி மாநகராட்சியைச் சேர்ந்த பணி மேற்பார்வையாளர் 25.05.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதியில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் வழங்கியது தொடர்பாக புகார் மனுக்கள் பெறப்பட்டதையொட்டி குழாய் பொருத்துநர்(பொ) திரு.எ. கண்ணன் என்பவர் விடுவிக்கப்பட்டார். மேலும், வார்டு எண் 1 முதல் 24 வரையில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டதன் விவரம் மற்றும் அனுமதியற்ற குழாய்கள் பொருத்தப்பட்டது தொடர்பான விவரங்களை கண்டறிய குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சிவகாசி மாநகராட்சி ஆணையரின் 20.05.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) ஆணையர், சிவகாசி மாநகராட்சி அவர்கள் தனது 20.05.2022 நாளிட்ட அறிக்கையில், " மேற்படி புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கைகள் எடுத்திடவும், அதற்குரிய விபரங்களை முழுமையாக ஆய்வு செய்திடவும் அதன் விபரத்தினை எழுத்து பூர்வமாக அளித்திடவும் 11.02.2022ம் தேதியன்று திரு.ஏ.கண்ணன், குழாய் பொருத்துநர்(பொ) என்பவருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குறிப்பாணை, குழாய் பொருத்துநர்(பொ) திரு.ஏ.கண்ணனுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரரால் நினைவூட்டல் கடிதம் கிடைக்கப்பெற்றது. இதன் தொடர் நடவடிக்கைகாக 17.05.2022 அன்று குழாய் பொருத்துநர்(பொ) திரு.ஏ.கண்ணன் சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதியில் எவ்வித முறைகேடான அனுமதியற்ற இணைப்புகள் ஏதும் இல்லை என தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அன்னாரது அறிவிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் சிவகாசி மாநகராட்சி ஆணையாளர் செயல்முறை ஆணை ந.க.எண்.123/2021/சி1 நாள்.17.05.2022ன்படி திருத்தங்கல் பகுதியில் மேலும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழாவண்ணம் குழாய் பொருத்துநர் பொறுப்பிலிருந்து திரு.ஏ.கண்ணன் விடுவிக்கப்பட்டு, குழாய் பொருத்துநர் திரு. R. திருநாவுக்கரசு நியமனம் செய்யப்பட்டுள்ளார். கூடுதலாக நகர் பகுதியில் வார்டு எண்.01 முதல் 24 வரை உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்ட விபரத்தினை குழாய் பொருத்துநர் ஆய்வு செய்து அறிக்கையாக 20.05.2022க்குள் சமர்ப்பித்திட மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.1855/2021/சி1 நாள்.06.05.2022ல் பல்வேறு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அனுமதியற்ற குழாய் சம்மந்தமாக தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், சிவகாசி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் சிவகாசி மாநகராட்சி பணி மேற்பார்வையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட திருத்தங்கல் நகராட்சிப்பகுதியில் கடந்த பல வருடங்களாக மானூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்பு வழங்குவதாகக் கூறி நகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக ரூ.25 ஆயிரம் பெற்றுக்கொண்டு நகராட்சிக்கு வைப்புத்தொகையை கட்டாமலும், ரசீது ஏதும் கொடுக்காமலும் அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டதால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என தனது புகார் மனுவில் குறிப்பிட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதியில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் வழங்கியது தொடர்பாக புகார் மனுக்கள் பெறப்பட்டதையொட்டி குழாய் பொருத்துநர்(பொ) திரு.ஏ.கண்ணன் அவர்களையே புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கைகள் எடுத்திடவும் அதற்குரிய விவரங்களை முழுமையாக ஆய்வு செய்திடவும் அதன் விவரத்தினை எழுத்துபூர்வமாக அளித்திடவும் மாநகராட்சியால் அறிவுறுத்தபட்டதின் பேரில் திரு.ஏ.கண்ணன் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட அறிக்கையில் திருத்தங்கல் பகுதியில் எவ்வித முறைகேடான அனுமதியற்ற இணைப்புகள் ஏதும் இல்லை என்பதை ஆணையர் ஏற்றுக்கொண்டு, இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் இனி எழாவண்ணம் இருக்க திரு.ஏ.கண்ணன், குழாய் பொருத்துநர்(பொ) பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டு திரு.R. திருநாவுக்கரசு நியமனம் செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதியில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் வழங்கியது தொடர்பாக புகார் மனுக்கள் பெறப்பட்டதையொட்டிதான் குழாய் பொருத்துநர் (பொ) பதவியிலிருந்து திரு.ஏ. கண்ணன் என்பவர் விடுவிக்கப்பட்டுள்ளார். வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதை தண்டனை என கருத இயலாது.

மேலும், வார்டு எண் 1 முதல் 24 வரையில் உள்ள தெருக்களில் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டதன் விவரம் மற்றும் அனுமதியற்ற குழாய்கள் பொருத்தப்பட்டது தொடர்பான விவரங்களை கண்டறிய 06.05.2022ல் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அனுமதியற்ற குடிநீர் குழாய் சம்மந்தமாக தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாநகராட்சி ஆணையர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

திருத்தங்கல் நகராட்சி ஆணையர்(பொ) மனுதாரருக்கு அனுப்பியுள்ள தனது 25.07.2016 நாளிட்ட கடிதத்தில் அனுமதியின்றி வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகள் கண்டறிந்து அவற்றை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஏறத்தாழ 6 ஆண்டுகள் கடந்த பிறகு, மனுதாரர் முதலமைச்சர் தனிப்பிரிவு, நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், ஆணையர், சிவகாசி மாநகராட்சி ஆகியோருக்கு இப்பொருள் தொடர்பாக மனுக்கள் அனுப்பியுள்ள பிறகே குடிநீர் குழாய் இணைப்புகள் அனைத்தும் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளதா என கள ஆய்வு செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது. இது மாநகராட்சின் மெத்தனப்போக்கையும், பொறுப்பின்மையுமே காட்டுகிறது.

அனுமதியற்ற இணைப்புகள் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதை இங்கு கண்கூடாக காணமுடிகிறது. இந்த முறைகேடான அனுமதியற்ற இணைப்புகள் குறித்து 01.01.2022ம் நாளிட்ட தினகரன் செய்தித்தாளிலும் வந்துள்ளதை இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு மனுதாரர் கொண்டு வந்துள்ளார். அவ்வாறு இருக்கையில் சிவகாசி மாநகராட்சி ஆணையர்,

திரு.ஏ.கண்ணன், குழாய் பொருத்துநர்(பொ) அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவித்திருப்பதை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

இதுபோன்ற தவறுகள் இனி வருங்காலங்களில் நடைபெறாமல் இருக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைத்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(i) முறைகேடான அனுமதியற்ற இணைப்புகள் தொடர்பாக கள ஆய்வு செய்திட செயற்பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைத்து மொத்த இணைப்புகள் எவ்வளவு உள்ளன, அதில் எவ்வளவு அனுமதியற்ற இணைப்புகள் உள்ளன என கண்டறிய வேண்டும். மேலும் இந்த அனுமதியற்ற இணைப்புகளினால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு, இனி இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அக்குழுவிடம் அறிக்கை பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii) மேலும் இதனை ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை மூலம் தேவையான உரிய ஆய்வும் நடத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iii) இப்பொருள் தொடர்பாக நேரடி விசாரணைக்கு மாநகராட்சி ஆணையரின் பிரதிநிதி ஒருவர் அழைக்கப்பட்டார். மேற்கண்ட மாநகராட்சியில் செயற் பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர்கள் இருந்தும் பணி மேற்பார்வையாளரை விசாரணைக்கு அனுப்பியுள்ள சிவகாசி மாநகராட்சி ஆணையரின் செயல் மிகவும் கண்டனத்துக்குரியது. இச்செயல் மாநகராட்சி ஆணையரின் பொறுப்பற்ற கடமை தவறிய செயலாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இது போன்ற செயல்கள் இம்முறைமன்ற நடுவத்தினை அவமதிக்கும் செயலாகும். எனவே இனி வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல் இருக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கிட வேண்டும்.

இதுபோன்ற முறைகேடான அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டு அதன் மூலம் அரசுக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பிற்கு காரணமான சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் உரிய விதிகளின் கீழ் கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The DMA is directed to constitute a committee to dig out the details of the number of illegal water supply connections made by the people of the area without the permission, clearance and rules of the then Municipality. Revenue loss on this account has to be worked out and collected from both the users and the field level officials responsible for this loss to the Local Body. The Municipality has only transferred a Tap Fitter which appears to be an eyewash to hoodwink the system. The Engineers,

Overseers and other area officials should be also chargesheeted for this violation and loss of revenue to the Local Body. The whole process should be completed within 60 days. Local Fund Audit Directorate may also audit this loss simultaneously.

2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.ஆ. கதிரவன்,
எண்.4, பெத்தனன் சந்து,
திருத்தங்கல் – 626 130.
சிவகாசி வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

3) ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்